1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே' மாண்புமிகு அமைச்சரவர்கள் சிற்பக் கலையை விரிவு செய்ய முயற்சி யெடுப்பதாகக் கூறினார்கள். சமீபத்தில் மாடர்ன் ஆர்ட் என்று சிற்பக் கலைக் கண்காட்சி ஒன்றைப் பார்த்தேன். அதில் ஆட்டாங்கல்லையும், குழ விக் கல்லையும் வைத்து இதுதான் சிற்பம் என்று சொல்கிறார்கள். இத னால் சிற்பக் கலை வாழ்கிறதா? இம் மாதிரி மாடர்ன் ஆர்ட்டைத் தடை செய்யுமா †

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாடர்ன் ஆர்ட்டுக்கும் சிற்பக் கலைக்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

(2) கவன ஈர்ப்பு.

செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் விளைவுகள் குறித்து.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், புலியூரில் உள்ள செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் அப் பகுதியில் ஐந்து மைல் சுற்றளவில் உள்ள விவசாயப் பயிர்கள், குடிநீர்க் கிணறுகள், பலன் தரும் மரங்கள் ஆகியவைகளில் சிமெண்ட் தூசி படிந்து சுகாதாரக் கேடு பயக்கும் வகையிலும், வருவாய் பாதிக்கப்படும் அளவிலும் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளதால் சிமெண்ட் தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் புகை அதிகமாக மேல் நோக்கி வெளியில் பரவாத அளவுக்கு மாற்று ஏற்பாடு செய்து அப் பகுதி பொது மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச் சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய சிமெண்ட் தொழிற்சாலைகளில் வெளி வருகிற புகை, தூசி ஆகியவற்றைப் பெருமளவு குறைப்பதற்கு அந்த சிமெண்ட் தொழிற்சாலை களில் மின்சாரச் சல்லடைகள் (Electrostatic Precipitators) பொருத்தப்பட வேண்டுமென்னும் கருத்து அரசாங்கத்தால் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட மின்சாரச் சல்லடைகள் இந்தியா வில் தயாராகவில்லை. வெளி நாட்டிலிருந்து அவற்றை வரவழைப்பதற்கு பெருமளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. உதை

மத்திய அரசு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைச் சுகாதாரத் துறையின் துணை இயக்குநர் பார்வையிட்டு வேறு மாற்று முறைகள் மூலமாகப் பெருமளவுக்குப் புகையையும், தூசியையும் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்படி எடுக்கப்பட்ட மாற்று நடவடிக்கைகளின் மூலமாக அதாவது, ஈரமாக அரைப்பது, சாக்குப் பைகளின் மூலமாக தூசிகளின் அளவைக் குறைப்பது (Other alternative methods like wet grinding, use of sack dust catchers, wet scrubbing, etc.) என்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஈரமாகச் சலித்தல் அல்லது பக்குவப்படுத்துதல், முறைகள் மூலமாக பெருமளவுக்குப் புகை, தூசி குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறைகள் புலியூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையில் கையாளப்பட்டு வருகிறது. ஆனாலும், அவர்கள் Electrostatic Precipitator எந்த அளவுக்கு விரைவாகப் பெற வேண்டுமோ அந்த அளவுக்கு விரைவாகப் பெற்று பொருத்த வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது அந்தப் பகுதியில் உள்ள எல்லா மரங்களின் இலைகளும் சிமெண்ட் கலராகிவிட்டன. உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால், அங்குள்ள ஆடு, மாடுகள் மனிதர்கள் சிமெண்ட் கலர் ஆகிவிடக் கூடிய நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, உடனடியாக உத்திரவிட்டு மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : முன்னால் பதில் சொல்லுகிற போதே சொன்னேன். The company has adopted other alternative methods like wet grinding, use of sack dust catchers, wet scrubbing, etc. These methods provided by the company reduced the cement dust nuisance to a large extent. பெரும் அளவு புகையும் தூசியும் குறைக்கப்பட்டிருக்கிறது. மாற்று முறைகள் மூலம் சிமெண்ட் தூசிகள், புகை வருவது ஓரளவு தடுக்கப்பட்டிருக்கிறது.

The company will however be requested to provide Electrostatic Precipitator when it becomes available.

இந்திய அரசினுடைய வெளிநாட்டுச் செலாவணி இடம் தருகிறபோது எவ்வளவு விரைவாக இந்த மின்சாரச் சல்லடை பொருத்தப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு விரைவாகப் பொருத்தப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்.